**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

**முன்னிலை – திரு.R.வெங்கடேஷ் பிரசாந்த், B.A.,B.L.(Hons), மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், திருப்புவனம்**

**2057, திருவள்ளுவர் ஆண்டு, பராபவ வருடம், ஆடி மாதம் 18–ம் தேதி**

**2026- ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 03–ம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண் –264/2024**

**CNR No: TNSV15006417–2024**

| | |
|---|---|
| குற்றம் முறையிடுபவர் | அரசுக்காக காவல் சார்பு ஆய்வாளர், பூவந்தி காவல்நிலையம் அதன் குற்ற எண்.137/2016 |
| குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் | குமார், த/பெ.முருகேசன், M.G.R. நகர், மடப்புரம் விலக்கு |
| குற்றம் முறையிடப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 452, 294(b), 323, –ன் கீழ் |
| குற்றம் கோப்பிற்கு எடுக்கப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 452, 294(b), 323–ன் கீழ் |
| குற்றச்சாட்டு வனையப்பட்டது | எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 452, 294(b), 323, 506(2) –ன் கீழ் |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | 05.08.2016 |
| குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 29.09.2016 |
| எதிரி மீது குற்றச்சாட்டுக்கள் வனையப்பட்ட நாள் | 12.05.2017 |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | அ.சா.1: மு.வி &கு.வி: 19.06.2017<br>அ.சா.2: மு.வி &கு.வி: 19.06.2017<br>அ.சா.3: மு.வி : 19.06.2017 & கு.வி: இல்லை<br>அ.சா.4: மு.வி : 27.07.2018 & கு.வி: இல்லை<br>அ.சா.5: மு.வி : 27.07.2018 & கு.வி: இல்லை<br>அ.சா.6: மு.வி & கு.வி: 22.08.2019<br>அ.சா.7: மு.வி : 20.09.2021 & கு.வி: இல்லை<br>அ.சா.8: மு.வி : 10.10.2022& கு.வி: இல்லை<br>அ.சா.9: மு.வி & கு.வி: 19.06.2026<br>அ.சா.10: மு.வி & கு.வி: 29.06.2026 |
| பல்வகை மனு அதன் முடிவு | ---- |
| கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 02.07.2026 |

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:03:41 +0530

| | |
|---|---|
| தீர்வு | **முடிவாக,** எதிரி இ.த.ச பிரிவுகள் 452, 294(b), 323,–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி ஆவணம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை. |

இவ்வழக்கு குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் 2 சிவகங்கையில் CC.No.20/2017 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் பின் இந்நீதிமன்ற ஆளுகைக்கு உட்பட்டதால் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் CC.No.264/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கு கடந்த 20.07.2026–ம் தேதியில் என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த பொழுது, அரசுக்காக கற்றறிந்த குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–1 திருமதி. R.திலகராணி அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.B.செல்லச்சாமி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

<u>**தீர்ப்புரை**</u>

வாதி மடப்புரம் விலக்கு எம்.ஜி.ஆர் நகரில் தனது அம்மாவுடன் வசித்து வருகிறார். வாதி திருப்புவனம் பஞ்சாயத்து யூனியனில் தற்காலிக டிரைவராக வேலை பார்த்து வருகிறார். வாதிக்கும், எதிரிக்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ளது. 04.08.2016ம் தேதி இதவு 09.00மணியளவில் திருப்புவனத்தில் உள்ள வாதி அவரது நண்பர் குமார் என்பவருக்கு போன் பண்ணியுள்ளார். அது தவறுதலாக எதிரி குமாருக்கு போன் போய் விட்டது. இதனால் கோபம் கொண்ட எதிரி இரும்பு கம்பியை எடுத்துக் கொண்டு வாதி வீட்டிற்குள் நுழைந்து ஏண்டா தேவடியா மகனே எனக்கு எதுக்குடா போன் பண்ண என்று அசிங்கமாக பேசி கொண்டு கையில் வைத்திருந்த கம்பியால் வாதியின் தலையில் அடிக்க வந்த போது வாதி தனது இருகைகளாலும் தடுத்துள்ளார். பின்பு வாதியை எதிரி கம்பியால் மாறி மாறி இரண்டு தோள்பட்டையிலும் அடித்துள்ளார். வாதி வலி தாங்கமுடியாமல் சத்தம் போடவும் வாதியின் அம்மாவும் பக்கத்தில் இருந்த கனிமொழி என்பவரும் ஓடி வரவும் எதிரி வாதியை பார்த்து கையில் வைத்திருந்த கம்பியை காண்பித்து உன்னை

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:03:48 +0530

கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிக்கொண்டு மேற்கு பக்கமாக ஓடியுள்ளார். அருகில் உள்ளவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வரவழைத்து வாதி தனது அம்மாவுடன் திருப்புவனம் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று அங்கிருந்து மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்துள்ளார். எனது விசாரணையின் போது வாதி எதிரி மீதுள்ள முன்பகை காரணமாக அவர் கம்பியை வைத்து அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக புகாரில் தெரிவித்துள்ளார். ஆகையால் இதச பிரிவுகள் 452, 294(b), 324, 506(ii)–ல் இருந்து 452, 294(b), 323ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே எதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(b), 323ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) இவ்வழக்கில் அரசுத்தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற புகார் மற்றும் இதர ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கின் எதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(b), 323ன் கீழ் குற்றம் புரிந்திருக்கிறார் என்பதற்கு போதிய முகாந்திர ஆதாரங்கள் இருந்ததால் இவ்வழக்கு மேற்படி பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்ட பின்னர் எதிரி நீதிமன்றத்தில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3) இவ்வழக்கின் எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான பின்னர் இவ்வழக்கு ஆவணங்களின் நகல்கள் பிரிவு 207 குற்ற விசாரணை நடைமுறைச் சட்ட பொருண்மைகளுக்கு இணங்க இலவசமாக வழங்கப்பட்டது.

4) இவ்வழக்கின் எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து குற்ற அறிக்கையில் கண்டுள்ள குற்றம் பற்றி வினவ எதிரி அவற்றை தம்மிச்சையாக மறுத்துக் கூறினார். எனவே இருதரப்பினர்களை கேட்டும் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்ததில் இவ்வழக்கின் எதிரி மீது முதல் நோக்கில் குற்றச்சாட்டு வனைய போதிய முகாந்திரங்கள் இருந்தமையால் எஎதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(b), 323ன் கீழ் குற்றச்சாட்டு பற்றி விளக்கிக் கூறி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை என்று மறுத்தார்.

5)இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) **அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களிலிருந்து வெளிப்படும் அரசு**

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:03:54 +0530

**தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு:–**

6.1)அ.சா.1 அழகர்சாமி தனது சாட்சியத்தில், தான் தற்பொழுது மடப்புரம் விலக்கு எம்ஜிஆர் நகரில் வசித்து வருகிறதாகவும், தான் கார் டிரைவராக வேலை பார்த்து வருகிறதாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், தங்களுக்குள் இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்து வந்ததாகவும், கடந்த 04.08.2016ம் தேதி இரவு மணி 9க்கு தனது வீட்டில் தான் இருந்த போது எதிரி அவர் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியை வைத்து தன்னை அடித்தார் என்றும், ஆபாசமாக தன்னை பேசினார் என்றும், தேவடியா மகனே என்று சொன்னார் என்றும், பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் வீட்டிற்குள் வந்து தன்னை பார்த்தார்கள் என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், தான் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது பூவந்தி காவல்நிலையத்தினர் தன்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், அந்த புகார் வாக்குமூலம் தன்னிடம் காட்டப்படுவது தான் என்றும், அதிலுள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 என்றும் போலீசார் வழக்கு சம்பந்தமாக தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.2) அ.சா.2 பொன்னம்மாள் தனது சாட்சியத்தில், தான் தற்போது மடப்புரம் விலக்கு எம்ஜிஆர் நகரில் வசித்து வருகிறதாகவும், தான் கூலி வேலை செய்து வருகிறதாகவும், அ.சா.1 தனது மகன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், தங்கள் வீட்டிலிருந்து 3வது வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றும், கடந்த ஆனி மாதம் 2013ம் ஆண்டு தேதி ஞாபகமில்லை என்றும், இரவு 9 மணிக்கு தனது மகன் தனது வீட்டில் இருந்தான் என்றும், வேலைக்கு சென்று விட்டு சாப்பிட்டு கொண்டு இருந்தான் என்றும், தான் வீட்டிற்குள் அடுப்பங்கரைக்குள் சென்று விட்டு வந்து, பார்த்த பொழுது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ தேவடியா மகனே என்று ஆபாசமாக பேசி கொண்டு இருந்தார் என்றும், கையில் வைத்திருந்த ராடு கம்பியை வைத்து இந்த எதிரி அ.சா.1 தாக்கினார் என்றும், அதனை தான் பார்த்தேன் என்றும், பின்னர் காயம்பட்ட தனது மகனை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன் என்றும், போலீசார் இந்த வழக்கு சம்பந்தமாக தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.3) அ.சா.3 கனிமொழி தனது சாட்சியத்தில், தான் தற்போது மடப்புரம் விலக்கில் வசித்து வருகிறேன் என்றும், தான் வீட்டு குடித்தனமாக உள்ளேன் என்றும், அ.சா.1,

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:00 +0530

அ.சா.2ஐ தனக்கு தெரியும் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், மற்றபடி இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.4) அ.சா.4 இந்திராணி தனது சாட்சியத்தில், தான் தற்பொழுது மடப்புரம் விலக்கு கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், தான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், இந்த வழக்கின் ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அ.சா1 ஐயும் தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 ம் இந்த வழக்கின் எதிரியும் தனது ஊரில் தான் வசித்து வருகிறார்கள் என்றும், மற்ற படி இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.5) அ.சா.5 அபிராமி தனது சாட்சியத்தில், தான் தற்பொழுது மடப்புரம் விலக்கு கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றும், தான் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன் என்றும், இந்த வழக்கின் ஆஜர் எதிரியை தனக்கு தெரியும் என்றும், அசா1 ஐயும் தனக்கு தெரியும் என்றும், அ.சா.1 ம் இந்த வழக்கின் எதிரியும் தனது ஊரில் தான் வசித்து வருகிறார்கள் மற்ற படி இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.6) அ.சா.6 கருப்பச்சாமி தனது சாட்சியத்தில், தான் மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறதாகவும், தான் கடந்த 05.08.2014ம் தேதி காலை 6.00 மணிக்கு பூவந்தி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையிலிருந்து போன் மூலம் கிடைக்க பெற்ற தகவலை பெற்று மதுரை அரசு மருத்துவமனை சென்று அங்கு வார்டு 99ஏ உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த திருப்புவனம் மடப்புரம் விலக்கு எம்ஜிஆர் நகரை சேர்ந்த முருகேசன் என்பவரின் மகன் அழகர்சாமி என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.137/2016 இதச பிரிவுகள் 452, 294(பி), 324, 506(2)ன் படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையும் கனம் ஜே.எம்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றும், ஒரு நகலை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும், ஒரு நகலை சார்பு ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன் என்றும், சார்பு ஆய்வாளர் இதுசம்பந்தமாக தன்னை விசாரித்தனர் என்றும், தான் பதிவு செய்த அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.7) அ.சா.7 சசிகுமார் தனது சாட்சியத்தில், தான் திருப்புவனத்தில் குடியிருந்து ,

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:10 +0530

டிவி மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும், சாட்சி புவனேஸ்வரனை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும், வழக்கின் புகார்தாரர் அழகர்சாமியை தனக்கு தெரியும் என்று சாட்சி அளித்துள்ளார்.

6.8) அ.சா.8 புவனேஸ்வரன் தனது சாட்சியத்தில், தான் தற்பொழுது திருப்புவனத்தில் குடியிருந்து வருகிறேன் என்றும், தான் கார் டிரைவராக வேலை பார்த்து வருகிறேன் என்றும், இந்த வழக்கு அடிதடி வழக்கு என்று தனக்கு தெரியும் என்றும், தன்னிடம் தற்பொழுது காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், பார்வை மகசரில் உள்ள விவரம் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.9) அ.சா.9 அசோகசக்கரவர்த்தி மருத்துவர் தனது சாட்சியத்தில், கடந்த 04.08.2016 ம் தேதி சுமார் 21 வயது மதிக்கத்தக்க அழகர்சாமி என்பவர் தன்னிடம் சிகிச்சைக்காக வந்தார் என்றும், அவர் திருப்புவனம் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக பரிந்துரையின் பேரில் அனுப்பப்பட்டார் என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். மேற்படி அழகர்சாமி என்பவர் 08.08.2016 அன்று சிகிச்சை முடித்து விடுவிக்கப்பட்டார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் காயச்சான்று தான் கொடுத்ததுதான் என்றும், அதிலுள்ள கையெழுத்தும் தன்னுடையதுதான் என்றும், மேற்படி காயச்சான்று அ.த.சா.ஆ.3 என்றும், அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை ஆவணங்கள் 2018 வரை உள்ளவைகள் அழிக்கப்பட்டுவிட்டதால் மேற்படி அழகர்சாமி என்பவருக்கு தான் சிகிச்சையளித்தற்கான ஆவணங்கள் தற்போது தன்னிடம் இல்லை என்றும், எனவே அவருக்கு எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்பது தன்னால் தற்போது கூற இயலவில்லை என்றும், அவ்வாறு ஆவணங்கள் அழிக்கப்பட்டதற்கான மதுரை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்களின் உத்தரவு (சான்றிட்ட நகல்) அ.த.சா.ஆ.4 என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

6.10) அ.சா.10 முகைதீன் அப்துல்காதர் தனது சாட்சியத்தில், கடந்த 2016 ம் வருடம் பூவந்தி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது சிறப்பு சார்பு

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:16 +0530

ஆய்வாளர் திரு. கருப்புச்சாமி என்பவர் பதிவு செய்த நிலையக் குற்ற எண். 137/2016 பிரிவுகள் 452, 294(b), 324, 506(ii) இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகலைப் பெற்று சம்பவ இடமான மடப்புரம் விலக்கு MGR நகரில் உள்ள வாதியின் வீட்டிற்கு 05.08.2016 ம் தேதியன்று காலை 09.30 மணியளவில் சென்று சாட்சிகள் சசிகுமார், புவனேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும, மேற்படி பார்வை மகஜர் அ.த.சா.ஆ.5 என்றும், மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.6 என்றும், மேற்படி பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், பின்னர் சாட்சிகள் பொன்னம்மாள், கனிமொழி, இந்திராணி, அபிராமி மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை தேடிச் சென்ற போது திருப்புவனம் பேருந்து நிறுத்தம் அருகே நின்ற எதிரி குமார் என்பவரை காரணம் கூறி அதே நாள் 11.00 மணியளவில் கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அழகர்சாமி என்பவருக்கு சிசிச்சை அளித்த மருத்துவர் திரு. அசோக் சக்கரவர்த்தி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், காயச்சான்று பெற்றேன் என்றும், மேற்படி காயச்சான்று அ.த.சா.ஆ.3 ஆக ஏற்கனவே அ.சா.9 மூலமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி அழகர்சாமிக்கு உண்டான காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதால் மேற்படி வழக்கின் சட்டப்பிரிவை 452, 294(b), 324, 506(ii) இதசவிலிருந்து 452, 294(b), 323, 506(ii) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்தேன் என்றும், மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.7 என்றும், அதன் பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. கருப்பசாமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் தனது வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(b), 323, 506(ii) ன் கீழ் கடந்த 29.09.2016 ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

7) அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இவ்வழக்கு எதிரிக்கு பாதகமாக அமைந்த அம்சங்களை குறித்து கு.வி.மு.ச.313 (1) (ஆ) பிரிவின் கீழ் வினவியபோது, எதிரி அவற்றினை பொய் சாட்சி என்று மறுத்துக் கூறினார்.

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:22 +0530

எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டா, என்று வினவிய போது எதிரி தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார் .

8) இவ்வழக்கு எதிரி மீது அரசுதரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்னையாகும்.

9) **தீர்வு–**

அரசு தரப்பு வழக்கானது இவ்வழக்கில் வாதி மடப்புரம் விலக்கு எம்.ஜி.ஆர் நகரில் தனது அம்மாவுடன் வசித்து வருகிறார். வாதி திருப்புவனம் பஞ்சாயத்து யூனியனில் தற்காலிக டிரைவராக வேலை பார்த்து வருகிறார். வாதிக்கும், எதிரிக்கும் முன்விரோதம் இருந்து வந்துள்ளது. 04.08.2016ம் தேதி இதவு 09.00மணியளவில் திருப்புவனத்தில் உள்ள வாதி அவரது நண்பர் குமார் என்பவருக்கு போன் பண்ணியுள்ளார். அது தவறுதலாக எதிரி குமாருக்கு போன் போய் விட்டது. இதனால் கோபம் கொண்ட எதிரி இரும்பு கம்பியை எடுத்துக் கொண்டு வாதி வீட்டிற்கு நுழைந்து ஏண்டா தேவடியா மகனே எனக்கு எதுக்குடா போன் பண்ண என்று அசிங்கமாக பேசி கொண்டு கையில் வைத்திருந்த கம்பியால் வாதியின் தலையில் அடிக்க வந்த போது வாதி தனது இருகைகளாலும் தடுத்துள்ளார். பின்பு வாதியை எதிரி கம்பியால் மாறி மாறி இரண்டு தோள்பட்டையிலும் அடித்துள்ளார். வாதி வலிதாங்கமுடியாமல் சத்தம் போடவும் வாதியின் அம்மாவும் பக்கத்தில் இருந்த கனிமொழி என்பவரும் ஓடி வரவும்.எதிரி வாதியை பார்த்து கையில் வைத்திருந்த கம்பியை காண்பித்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிக்கொண்டு மேற்கு பக்கமாக ஓடியுள்ளார். அருகில் உள்ளவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து வரவழைத்து வாதி தனது அம்மாவுடன் திருப்புவனம் அரசு ஆஸ்பத்திரிக்கு சென்று முதலுதவி சிகிச்சை பெற்று அங்கிருந்து மதுரை பெரிய ஆஸ்பத்திரிக்கு சென்று சிகிச்சையில் சேர்ந்துள்ளார். எனது விசாரணையின் போது வாதி எதிரி மீதுள்ள முன்பகை காரணமாக அவர் கம்பியை வைத்து அடித்து கொலை மிரட்டல் விடுத்ததாக புகாரில் தெரிவித்துள்ளார். ஆகையால் இதச பிரிவுகள் 452, 294(b), 324, 506(ii) ல் இருந்து 452, 294(b), 323ஆக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. எனவே எதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(b), 323ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, அதனை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் முன்னிலைப்படுத்தபட்டுள்ளனர்.

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:29 +0530

10) அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் வழக்கு சம்பவம் பற்றி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

11) எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும், அ.சா.3 முதல் 7 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாகவும், சம்பவ இடத்திற்கு அருகாமையில் உள்ள நபர்களை சாட்சி பட்டியலில் சாட்சிகளாக சேர்க்கவும் இல்லை, விசாரிக்கவும் இல்லை என்றும், எதிரி மீதான இதச பிரிவுகள் 452, 294(b), 323 ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திறக்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எனவே எதிரிக்கு சந்தேகத்தின் பலனை அளித்து விடுதலை செய்யுமாறு வாதுரை எடுத்துரைத்தார்.

12) இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1 அழகர்சாமி தனது சாட்சியத்தில், அ.சா.1 தரப்பினருக்கும் எதிரி குடும்பத்தாருக்கும் இடையே இடப்பிரச்சனை சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வந்தது என்றும், கடந்த 04.08.2016ம் தேதி இரவு 9.00 மணிக்கு தான் வீட்டில் இருந்தபோது எதிரி அவர் கையில் வைத்திருந்த இரும்பை கம்பியை வைத்து தன்னை அடித்தார் என்றும், ஆபாசமாக தன்னை பேசினார் என்றும், தேவிடியா மகனே என்று சொன்னார் என்றும், பக்கத்து வீட்டில் இருந்தவர்கள் வீட்டிற்குள் வந்து தன்னை பார்த்தார்கள் என்றும், 108 ஆம்புலன்ஸ் மூலமாக சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், தான் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த போது பூவந்தி காவல்நிலையத்தினர் தன்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் புகாரை நான் தான் எழுதினேன் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

13)இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.2 பொன்னம்மாள் தனது சாட்சியத்தில், கடந்த ஆனி மாதம் 2013ம் ஆண்டு தேதி ஞாபகம் இல்லை இரவு 9.00 மணிக்கு தனது மகன் இரவு வீட்டில் இருந்தான் என்றும், வேலைக்கு சென்றுவிட்டு சாப்பிட்டு கொண்டிருந்தான் என்றும், தான் வீட்டிற்குள் அடுப்பங்கறைக்குள் சென்றுவிட்டு வந்து பார்த்தபோது ஆஜர் எதிரி அ.சா.1 ஐ தேவிடியா மகனே என்று ஆபாசமாக பேசி கொண்டிருந்தார் என்றும்,

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:34 +0530

கையில் வைத்திருந்த ராடு கம்பியை வைத்து அ.சா.1 ஐ எதிரி தாக்கினார் என்றும், அதனை தான் பார்த்தேன் என்றும், பின்னர் காயம்பட்ட தனது மகனை மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன் என்றும், போலீசார் இவ்வழக்கு சம்பந்தமாக தன்னை விசாரித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2 தனது குறுக்கு விசாரணையில், எனது மகனுக்கும் எதிரியின் மனைவிக்கும் தவறான தொடர்பு இருந்ததாக ஊருக்குள் பேச்சு இருந்தது என்றும், அதனால் தனது மனைவியை கண்டித்தார் என்றும், அதனால் அவர் மனைவியை அவரது தகப்பனார் வீட்டிற்கு அனுப்பி விட்டார் என்ற விபரம் தான் கேள்விப்பட்டு தெரிந்து கொண்டேன் என்றும், தனது மகனுக்கும் எதிரியின் மனைவிக்கும் உள்ள தவறான தொடர்பிற்காக எதிரியின் தகப்பனார் பூவந்தி காவல்நிலையத்தில் ஒரு புகார் கொடுத்ததன் அடிப்படையில் தனது மகனை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

14)இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.3 கனிமொழி தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.3ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

15)இவ்வழக்கில் கேள்விபட்ட சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.4 இந்திராணி தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.4ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

16)இவ்வழக்கில் கேள்விபட்ட சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.5 அபிராமி தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:40 +0530

செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.5ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17) இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா.6 கருப்பச்சாமி தனது சாட்சியத்தில், தான் மாவட்ட குற்றப்பிரிவு காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறதாகவும், தான் கடந்த 05.08.2014ம் தேதி காலை 6.00 மணிக்கு பூவந்தி காவல்நிலைய சிறப்பு சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்த போது மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையிலிருந்து போன் மூலம் கிடைக்க பெற்ற தகவலை பெற்று மதுரை அரசு மருத்துவமனை சென்று அங்கு வார்டு 99ஏ ல் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்த திருப்புவனம் மடப்புரம் விலக்கு எம்ஜிஆர் நகரை சேர்ந்த முருகேசன் என்பவரின் மகன் அழகர்சாமி என்பவரிடம் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.137/2016 இதச பிரிவுகள் 452, 294(பி), 324, 506(2)ன் படி வழக்கு பதிவு செய்தேன் என்றும், புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையும் கனம் ஜே.எம்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றும், ஒரு நகலை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும், ஒரு நகலை சார்பு ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன் என்றும், சார்பு ஆய்வாளர் இதுசம்பந்தமாக தன்னை விசாரித்தனர் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

18)இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.7 சசிகுமார் தனது சாட்சியத்தில், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையெழுத்து தன்னுடையது இல்லை என்றும், சாட்சி புவனேஸ்வரனை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்பந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தன்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றும், பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.7ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19)இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.8 புவனேஸ்வரன் தனது சாட்சியத்தில், தன்னிடம்

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:45 +0530

தற்பொழுது காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2வது கையொப்பம் தன்னுடையது இல்லை என்றும், பார்வை மகசரில் உள்ள விவரம் தனக்கு தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை செய்யப்பட்டும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக பதில்கள் பெறப்படவில்லை என்பதால், மேற்படி அ.சா.8ன் சாட்சியம் நம்பும்படியாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாகவும் அமையவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20) இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அ.சா.9 மருத்துவர் அசோக்சக்கரவர்த்தி தனது சாட்சியத்தில், கடந்த 04.08.2016 ம் தேதி சுமார் 21 வயது மதிக்கத்தக்க அழகர்சாமி என்பவர் தன்னிடம் சிகிச்சைக்காக வந்தார் என்றும், அவர் திருப்புவனம் அரசு மருத்துவமனையிலிருந்து மேல்சிகிச்சைக்காக பரிந்துரையின் பேரில் அனுப்பப்பட்டார் என்றும், அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன் என்றும், மேற்படி அழகர்சாமி என்பவர் 08.08.2016 அன்று சிகிச்சை முடித்து விடுவிக்கப்பட்டார் என்றும், அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன் என்றும், தன்னிடம் காட்டப்படும் காயச்சான்று தான் கொடுத்ததுதான் என்றும், அதிலுள்ள கையெழுத்தும் தன்னுடையதுதான் என்றும், அரசு இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை ஆவணங்கள் 2018 வரை உள்ளவைகள் அழிக்கப்பட்டுவிட்டதால் மேற்படி அழகர்சாமி என்பவருக்கு தான் சிகிச்சையளித்தற்கான ஆவணங்கள் தற்போது தன்னிடம் இல்லை என்றும், எனவே அவருக்கு எந்த இடத்தில் காயம் ஏற்பட்டது என்பது தன்னால் தற்போது கூற இயலவில்லை என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

21)இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியாக விசாரிக்கப்பட்ட அ.சா.10 முகைதீன் அப்துல் காதர், சார்பு ஆய்வாளர் (ஓய்வு) தனது சாட்சியத்தில், கடந்த 2016 ம் வருடம் பூவந்தி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தபோது சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. கருப்புச்சாமி என்பவர் பதிவு செய்த நிலையக் குற்ற எண். 137/2016 பிரிவுகள் 452, 294(b), 324, 506(ii) இதச வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகலைப் பெற்று சம்பவ இடமான மடப்புரம் விலக்கு MGR நகரில் உள்ள வாதியின் வீட்டிற்கு 05.08.2016 ம் தேதியன்று காலை 09.30 மணியளவில் சென்று சாட்சிகள் சசிகுமார், புவனேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன் என்றும, மேற்படி பார்வை மகஜரில்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:51 +0530

சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றும், பின்னர் சாட்சிகள் பொன்னம்மாள், கனிமொழி, இந்திராணி, அபிராமி மற்றும் மகஜர் சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், பின்னர் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரியை தேடிச் சென்ற போது திருப்புவனம் பேருந்து நிறுத்தம் அருகே நின்ற எதிரி குமார் என்பவரை காரணம் கூறி அதே நாள் 11.00 மணியளவில் கைது செய்து நிலையம் கொண்டு வந்து திரேக பரிசோதனை செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன் என்றும், பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட அழகர்சாமி என்பவருக்கு சிசிச்சை அளித்த மருத்துவர் திரு. அசோக் சக்கரவர்த்தி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், காயச்சான்று பெற்றேன் என்றும், மேற்படி அழகர்சாமிக்கு உண்டான காயம் சாதாரண காயம் என சான்று வழங்கியதால் மேற்படி வழக்கின் சட்டப்பிரிவை 452, 294(b), 324, 506(ii) இதசவிலிருந்து 452, 294(b), 323, 506(ii) இதசவாக சட்டப்பிரிவு மாறுதல் செய்தேன் என்றும், அதன் பின்னர் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு. கருப்பசாமி என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும், இத்துடன் தனது வழக்கு விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(b), 323, 506(ii) ன் கீழ் கடந்த 29.09.2016ம் தேதியன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

22) இவ்வழக்கில் எதிரி மீது இதச பிரிவுகள் 452, 294(b), 324, 506(ii)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தபோதிலும், அ.சா.10 புலன் விசாரணை அதிகாரியின் ரகசிய விசாரணையிலிருந்தும் சாட்சிகளின் விசாரணையிலிருந்தும் இவ்வழக்கில் எதிரி ஆயுதங்களை பயன்படுத்தவில்லை என்று தெரிய வந்ததாகவும், கையால் தான் எதிரியை தாக்கியதாகவும், அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்பதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவை இதச பிரிவுகள் 452, 294(b), 324, 506(ii)லிருந்து இதச பிரிவுகள் 452, 294(b), 323 ஆக சட்டபிரிவு மாறுதல் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கையோடு குற்ற இறுதியறிக்கை இதச பிரிவுகள் 452, 294(b), 323ன் கீழ் தாக்கல் செய்துள்ள நிலையில், புலன் விசாரணைஅதிகாரியான அ.சா.10 தனது சாட்சியத்தில், இதச பிரிவுகள் 452, 294(b), 323, 506(ii)ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளது முன்னுக்கு பின் முரணாக அமைந்துள்ளது. மேலும், இவ்வழக்கில் எதிரி ஆயுதம் எதுவும் பயன்படுத்தவில்லை என்ற அடிப்படையில் சட்டபிரிவை மாற்றி அறிக்கை தாக்கல் செய்து

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:04:58 +0530

குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், அ.சா.1 மற்றும் 2 தனது சாட்சியத்தில், எதிரி அவர் கையில் வைத்திருந்த இரும்பு கம்பியை வைத்து அ.சா.1 ஐ அடித்தார் என்று சொல்லியுள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், அ.சா.1க்கும், எதிரியின் மனைவிக்கும் தவறான தொடர்பு இருந்ததன் விளைவாக ஏற்கனவே எதிரியின் தகப்பனார் அ.சா.1ன் மீது புகார் கொடுத்துள்ளார் என்பதை அறிய முடிகிறது. ஆனால் அ.சா.1 தனது சாட்சியத்தில், இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்பகை இருந்ததாக சொல்லியுள்ளார். இடப்பிரச்சனை சம்பந்தமாக முன்விரோதம் இருந்தது குறித்து அ.சா.1 தனது புகாரிலோ, போலீசார் விசாரணையிலோ எதுவும் குறிப்பிடவில்லை. மேலும், இவ்வழக்கில் அ.சா.1ன் தாயாரான அ.சா.2 ஐ தவிர்த்து இதர கண்ணுற்ற, கேள்விப்பட்ட, பார்வை மகஜர் சாட்சிகள் பிறழ் சாட்சியம் அளித்துள்ளதால் அவர்களுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. அ.சா.2ம் தனது குறுக்கு விசாரணையில், அ.சா.1 ஆன தனது மகனுக்கும், எதிரியின் மனைவிக்கும் தகாத உறவு இருந்து வந்ததை ஒப்புக்கொண்டுள்ளார். இவ்வழக்கில் அ.சா.1 மற்றும் 2 ஆகியோரின் சாட்சியமானது எதிரி அ.சா.1ன் வீட்டில் அத்துமீறி நுழைந்தார் என குறிப்பிட்டு சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரி மீதான இதச பிரிவு 452ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

23) மேலும், இவ்வழக்கில் அ.சா.1 ஐ எதிரி கெட்ட வார்த்தையால் பேசியதாக அ.சா.1 மற்றும் 2 குறிப்பிட்டு சாட்சியம் அளித்துள்ள போதிலும்அதனால் தங்களுக்கு சங்கடமாகவோ, அறுவருப்பாகவோ இருந்ததாக குறிப்பிட்டு எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும், எதிரி மீதான இதச பிரிவு 323ன் கீழான குற்றச்சாட்டை நிரூபிக்க அரசு தரப்பில் போதுமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இவ்வழக்கில் அ.சா.1க்கு சிகிச்சை அளித்ததாக சொல்லப்படும் மருத்துவர் அ.சா.9 தனது சாட்சியத்தில், 2016ம் ஆண்டு காலக்கட்ட மருத்துவ ஆவணங்கள் அழிக்கப்பட்டுவிட்டதாகவும், ஆவணங்கள் அழிக்கப்பட்டதற்கான மதுரை அரசு மருத்துவக்கல்லூரி முதல்வர் அவர்களின் உத்தரவு சான்றிட்ட நகல் அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி மருத்துவர் தனது குறுக்கு விசாரணையில், அ.சா.1 ஐ யாரால் எங்கு வைத்து எதனால் எந்த ஆயுதத்தால் எந்த இடத்தில் தாக்கப்பட்டார் என்ற விபரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:05:04 +0530

என்றும், மருத்துவமனையில் அ.சா.1 அனுமதிக்கப்பட்ட நேரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான் என்றும், சம்பவ காலக்கட்டத்தில் அ.சா.1க்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்த ஆவணங்கள் தற்போது அழிக்கப்பட்டு விட்டதாக ஆவணம் தாக்கல் செய்துள்ள நிலையில், அ.சா.1க்கு அளிக்கப்பட்ட சிகிச்சை ஆவணங்கள் இருந்தால் தான் என்னென்ன காயம் ஏற்பட்டது என்பது குறித்து சொல்ல முடியும் என்றால் சரிதான் என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் இவ்வழக்கில் அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள காயச்சான்றிதழிலும் Simple Injury என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் எந்த இடத்தில் காயம் என்ன காயம் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. எனவே, எதிரி மீதான இதச பிரிவு 323ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் நிரூபணம் செய்ய போதுமான ஆவணம் முன்னிடப்படவில்லை என்றும், எனவே எதிரி மீதான இதச பிரிவுகள் 294B , 323ன் கீழான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

24) **முடிவாக,** எதிரி இ.த.ச பிரிவுகள் 452, 294(b), 323–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, கு.வி.மு.ச. பிரிவு 248(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. இவ்வழக்கில் எதிரி எழுதிக்கொடுத்த பிணைமுறி ஆவணம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதுகுறித்த உத்தரவு ஏதும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 03 –ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

R.VENKADESH PRASANTH
Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:05:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்

அரசு தரப்பு சாட்சிகள்:–

| | |
|---|---|
| அ.சா.1 | அழகர்சாமி, நிகர்நிலை புகார்தாரர் |
| அ.சா.2 | பொன்னம்மாள், கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | கனிமொழி, கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.4 | இந்திராணி, கேள்விபட்ட சாட்சி |

| | |
|---|---|
| அ.சா.5 | அபிராமி, கேள்விப்பட்ட சாட்சி |
| அ.சா.6 | கருப்பச்சாமி, சிறப்பு சார்பு ஆய்வாளர், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவர் |
| அ.சா.7 | சசிகுமார், பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.8 | புவனேஸ்வரன், பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.9 | மருத்துவர் அசோக்சக்கரவர்த்தி, அரசு மருத்துவர், மதுரை. |
| அ.சா.10 | முகைதீன் அப்துல் காதர், சார்பு ஆய்வாளர் (ஓய்வு), புலன் விசாரணை அதிகாரி |

அரசுதரப்பு சான்றாவணங்கள்:–

| | |
|---|---|
| அ.த.சா.ஆ.1/அ.சா.1 | புகார் வாக்குமூலம் |
| அ.த.சா.ஆ.2/அ.சா.6 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.3/அ.சா.9 | அழகர்சாமி என்பவரது காயச்சான்று |
| அ.த.சா.ஆ.4/அ.சா.9 | ஆவணங்கள் அழிக்கப்பட்டதற்கான மதுரை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அவர்களின் உத்தரவு (சான்றிட்ட நகல்) |
| அ.த.சா.ஆ.5/அ.சா.10 | பார்வை மகஜர் |
| அ.த.சா.ஆ.6/அ.சா.10 | மாதிரி வரைபடம் |
| அ.த.சா.ஆ.7/அ.சா.10 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருட்கள் இல்லை**

எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்றுபொருட்கள்– இல்லை

R.VENKADESH PRASANTH

Digitally signed by R.VENKADESH PRASANTH
Date: 2026.08.03 18:05:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், திருப்புவனம்.

குறிப்பு–
1. விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.
2. வழக்கின் முடிவு காவல்துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3.வழக்கின் சாட்சிகள் 3 வாய்தாவிற்கு மேல் விசாரணையின்றி நிறுத்திவைக்கப்படவில்லை.

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**
**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.264/2024**
**தீர்ப்புரை**
**வரைவு/சீரான**
**நாள்: 03.08.2026**